**9.3.2026**

பெயர் - ராஜன், த/பெ. மூடலி கவுடர்

(துவங்கப்படும் நேரம் - 11.05 AM)

(முடிக்கப்பட்ட நேரம் - 12.05 PM)

**O.S. No.201/2017 (D.W - 3)**

**1** முதல் **4** வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி **:-**

திம்மம்மாள் எழுதியதாக சொல்லப்படும் உயிலில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. திம்மம்மாள் எப்போது இறந்தார் என்றால் 1982 வருடம் இறந்தார். திம்மம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 வாரிசுகள் ஆவார்கள் அவர்கள் யார் என்றால் திம்மாகவுடர், உச்சாகவுடர், மூடலி கவுடர் ஆகியவர்கள் ஆண் வாரிசுகள் ஆவார்கள். பெண் வாரிசுகள் 4 நபர்கள் இருந்தார்கள் அவர்கள் நால்வரும் இறந்து விட்டார்கள். அவர்களின் பெயர் என்ன என்றால் கெம்பம்மாள், உச்சம்மாள், காளம்மாள், சன்னம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள். (மேற்படி கேள்விகளை கேட்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறித்து பிராதில் தெரிவிக்கவில்லை என்றும் அதனால் மேற்படி கேள்விகள் கேட்பதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் போது தான் திம்மாளுக்கு வாரிசுகள் இருக்கும் விவரம் தங்களுக்கு தெரியவந்ததாகவும் அதனால் தாங்கள் அந்த வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனைக்கு உட்பட்டு கீழ்கண்ட கேள்விகளுக்கான குறுக்கு விசாரணை பதிவு செய்யப்படுகிறது).

மேற்படி 4 பெண் வாரிசுகளுக்கும் வாரிசுகள் உள்ளார்களா என்றால் சன்னம்மாளுக்கு 5 குழந்தைகள் அவர்கள் ராமன், கிருஸணன், ஜெயா, லட்சுமி, கோபால் ஆகியோர்கள் ஆவார்கள். அதில் ராமன், கிருஸ்ணன், லட்சுமி ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். அதில் ராமன், கிருஸ்ணன், லட்சுமி ஆகியோர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லை. ராமனும், கிருஸ்ணனும் திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார்கள். கெம்பம்மாள், உச்சம்மாள், காளம்மாள் ஆகியோர்கள் மைசூரில் உள்ளார்கள். அவர்களது விவரம் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் மேற்படி நபர்களுக்கு பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**10** முதல் **16** வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை **:-**

தாவா சொத்தானது மரியா கவுடர் சுயமாக சம்பாத்திய சொத்து என்ற சொன்னால் சரிதான். மரியா கவுடர் இறப்பதற்கு முன்பாக எனக்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களையும் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். யாருக்கும் எதுவும் எழுதிவைக்கவில்லை. தாவா சொத்தானது மரியா கவுடர் இறப்பிற்கு பின்னர் சட்டப்படி மரியா கவுடரின் வாரிசுகள் அனைவருக்கும் சேர வேண்டியது என்று சொன்னால் சரிதான். மரியா கவுடர் மனைவி திம்மாளையும் சேர்த்து 8 நபர்கள் மரியா கவுடரின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். மரியா கவுடர் இறப்பிற்கு பின்னர் திம்மம்மாள், முடலி கவுடர், உட்சாகவுடர், திம்மே கவுடர் ஆகிய 4 வாரிசுகள் மட்டுமே தாவா சொத்தினை பாகம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். மற்ற

வாரிசுகள் யாரும் தாவா சொத்தை மேற்படி 4 வாரிசுகள் மட்டும் பாகம் செய்து கொள்வதற்கு எவ்விதமான அனுமதியும் மற்றவாரிசுகளிடம் இருந்து பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

(மேற்படி கேள்வியை கேட்பதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறித்து பிராதில் தெரிவிக்கவில்லை என்றும் அதனால் மேற்படி கேள்விகள் கேட்பதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனைக்கு உட்பட்டு கீழ்கண்ட கேள்விகளுக்கான குறுக்கு விசாரணை பதிவு செய்யப்படுகிறது).

மற்ற வாரிசுகளான கெம்பம்மாள், உச்சம்மாள், காளம்மாள், சன்னம்மாள் ஆகியோர்கள் விடுதலை பத்திரம் எதுவும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. 1967 ம் வருடம் பாகப்பிரிவினை செய்யப்பட்டது போல் தான் ஆவணம் உள்ளது என்று சொன்னால் 1964 ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது. 1964 ம் வருடம் கெம்பம்மாள், உச்சம்மாள், காளம்மாள், சன்னம்மாள் ஆகியோர்கள் இருந்தார்களா என்றால் கெம்பம்மாள், உச்சம்மாள் ஆகியோர்கள் உயிருடன் இல்லை. காளம்மாள் மற்றும் சன்னம்மாள் மட்டுமே உயிருடன் இருந்தார்கள். கெம்பம்மாள் மற்றம் உச்சம்மாளின் வாரிசுகள் அந்த சமயத்தில் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். கெம்பம்மாள் மற்றம் உச்சம்மாளின் வாரிசுகள் விடுதலை பத்திரம் எதுவும் ஏற்படுத்தி கொடுத்தார்களா என்றால் இல்லை. 1964 ம் வருடத்தில் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரத்தின் படி தான் திம்மம்மாள் உயில் எழுதியதாக கூறியுள்ளேனா என்றால் ஆமாம். முடலி கடவுர் மற்றம் கிருஸ்ணனுக்கு திம்மம்மாள் உயில் எழுதியதாக கூறியுள்ளேன்.

தாவா சொத்தானது மரியா கவுடரின் சுயசம்பாதிய சொத்து என்றும் அந்த சொத்தானது மரியா கவுடரின் அனைத்து வாரிசுகளுக்கும் சொந்தமானது என்றும் அந்த சொத்தை பொறுத்து திம்மம்மாள் மட்டும் உயில் எழுத அவருக்கு எந்த பாக்கியதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1977 ம் வருடம் என் தந்தை மூடலி கவுடருக்கு ஒரு பாகத்தை திம்மம்மாள் விற்பனை செய்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மற்ற வாரிசுகளின் சொத்தை திம்மம்மாள் விற்பனை செய்ய இயலாது என்றும் அந்த விற்பனை செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. திம்மம்மாளுக்கு 1/8 பங்கு தான் விற்பனை செய்ய உரிமை உள்ளது என்றும் மொத்த சொத்தினை விற்பனை செய்ய அவருக்கு பாக்கியதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1977 ம் வருடம் ஏற்படுத்திய போது 1972 ம் வருடம் தான் உயில் எழுதி இருப்பதாக அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. 1977 ம் வருடம் என் தந்தைக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் 1972 ம் வருடம் திம்மம்மாள் உயில் எழுதியிருந்தால் அது குறித்து 1977 ம் வருடத்திய கிரையபத்திரத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றும் உயில் எழுதாததால் தான் அது குறித்து அந்த பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1972 ல் எழுதிய உயிலுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அது என் அப்பாவின் சொத்தாகும். அதில் எனக்கு உரிமை உள்ளது. அந்த உயிலில் என் பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான். அதில் முடலிகடவுர் மற்றும் கிருஸ்ணனுக்கு தான் எழுதப்பட்டுள்ளது. அந்த உயிலை நான் படித்துபார்த்துள்ளேனா என்றால் இல்லை எனக்கு எழுத படிக்க தெரியாது. வேறு யாராவது அந்த உயிலை படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை.

உயில் இருக்கும் விவரம் என் அப்பா கூறியதை வைத்து தான் எனக்கு தெரியும். அந்த உயிலில் என்ன காரணத்திற்காக மற்ற வாரிசுகள்கு சொத்தை கொடுக்காமல் முடலி கவுடர் மற்றும் கிருஸ்ணனுக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை.

என் அப்பாவோ, அவரின் தம்பி கிருஸ்ணனோ இந்த உயில் உண்மைதான் என்பதை நிரூபணம் செய்ய ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. அந்த உயிலில் யார் கையொப்பமிட்ட சாட்சிகள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உயிலில் சாட்சி கையொப்பமிட்டது போல் நபர்கள் யாரும் இல்லை என்று சொன்னால் என் பாட்டிக்கு தான் தெரியும். சாட்சிகள் யார் என்ற விவரம் என் அப்பாவிற்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயிலின் சாட்சிகள் யார் என்பதை தெரிந்து கொள்ள நான் ஏதாவது முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை. உயில் எழுதும் போது திம்மம்மாள் நல்ல மனநிலையில் இருந்தார் என்பதை காட்டுவதற்கு அவரது மருத்துவசான்று பெறப்பட்டதா என்றால் இல்லை. நான் கூறுவது போல் திம்மம்மாள் எவ்வித உயிலும் எழுதவில்லை என்றும் மற்ற வாரிசுகளின் சொத்துக்களை பொறுத்து அவருக்கு உயில் எழுதுவதற்கு உரிமை இல்லை என்றும் அவர் உயில்எழுதியதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. திம்மம்மாள் இறப்பிற்கு பின்னர் அவர் உயில் எழுதிய விவரம் என் அப்பாவிற்கு எப்போது தெரியவந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் குறித்து எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் என் பாட்டி இறப்பிற்கு பின்னர் என் தந்தைக்கு எதிராக ஜெகன் என்பவர்

வழக்கு போட்டபோது தெரியவந்தது. தாவா சொத்தை பொறுத்து எந்த நீதிமன்றத்திலும் எந்த வழக்கிலும் தீர்ப்பாகவில்லை என்று சொன்னால் ஜெகன் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அவர் இருமுறை வழக்கு தாக்கல் செய்திருந்தர். இருமுறையிம் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-9 ஆவணம் தான் நான் குறிப்பிடும் ஆவணம் என்று சொன்னால் சரிதான். அந்த உத்தரவில் வழக்கினை திரும்பவும் தாக்கல் செய்ய நீதிமன்ற உத்தரவுடன் வழக்கு திரும்ப பெற்றுக்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-7 ஆவணம் தீர்ப்பாணை என்றும் அதில் வழக்கினை திரும்பவும் தாக்கல் செய்ய நீதிமன்ற உத்தரவுடன் வழக்கு திரும்ப பெற்றுக்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-12 ஆவணமானது அசல் தாவா எண்.137/2012 என்றும் அது தவறுகளுக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் அது முழுமையான தீர்ப்பு அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நாளது தேதிவரை தாவா செத்த பொறுத்து முழுமையான தீர்ப்பு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 5 முதல் 16 வரையிலான பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் சரிபாதி பங்குள்ளது என்று சொன்னால் சரியல்ல.

10 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.